**Volume : 4, Issue : 1, May 2020** **Pg. No. 50 - 59**




# *இலக்கியங்களில் திருநங்கைகள்*

*ஆ.மகாலெட்சுமி,*
*தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்,*
*ஸ்ரீ கிருஷ்ணசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,*
*மேட்டமலை – சாத்தூர்.*

=================================================================

## *முன்னுரை*

*இயற்கையின் உன்னத படைப்புகளில் ஒன்று மனிதன். இம்மனிதனின் வாழ்வில் அடிப்படையாக திகழ்வது ஆண் – பெண் என்ற பாகுபாடு ஆகும். இதுவே வாழ்வின் அடித்தளமாகவும், ஆதாரமாகவும், மூலமாகவும் அமைகிறது. இந்த அடிப்படையான பால்நிலையிலிருந்து விலகி பால்திரிபு அடைந்தவர்கள் திருநங்கைகள் ஆவர். இத்திருநங்கைகள் மூன்றாம் பாலினமாய் தன்னை முன்னிறுத்தி தடைகளை எதிர்கொண்டு வரலாறு படைக்கின்றனர். இவர்களின் வரலாற்றை அறிய பல்வேறு இலக்கண, இலக்கியங்கள் துணைபுரிகின்றன.*

## *திருநங்கை - விளக்கம்*

*திருநங்கை என்பவள் ”**மங்கையானவள், திருநங்கையானவள் நிழலின் இருளில் சிரிப்பவள். அன்பின் ஊற்றாய் பிறந்தவள். வலியின் வலியை தாங்கியவள். திறமைகளை தீர்க்கமாய் பெற்றவள். ஆணாகி பெண்ணாய் யாதுமானவள்**”[1] என்று ஆயிஷா பாரூக் தன்னுடைய வலைப்பூ கட்டுரையில் கூறியுள்ளார். மூன்றாம் பாலினமாய் இருக்கும் திருநங்கைகளை பல்வேறு காலங்களில் மக்களால் பல பெயர்கள் கூறி அழைக்கப்பட்டுள்ளனர். அவை*

- ***பேடி***
- ***அலி***
- ***அரவாணி***
- ***திருநங்கை***
- ***அண்ணகர்***
- ***நிபூசகம்***

*போன்றவை ஆகும். இவ்வாறு பல பெயர்களால் திருநங்கைகள் அழைக்கப்பட்டிருந்தாலும் தான் ஒரு பெண் என்ற எண்ணம் மனஉச்சத்தில் இருப்பதால் திருநங்கை என்றழைப்பது மரியாதை நிமித்தமாகவும், பெருமையாகவும் இருப்பதாக ஒவ்வொரு திருநங்கைகளும் எண்ணுகின்றனர்.*

**இலக்கியங்களில் திருநங்கைகள்**

*மனிதன் தோன்றியது முதல் திருநங்கைகளும் தரணியில் வாழ்ந்து வருகின்றனர். ஓர் ஐந்தறிவு உயிரினம் இவ்வுலகில் வாழ்ந்தாலே அவ்வுயிரினத்தின் தன்மை, இனம், வகை என அனைத்தையும் பதிவு செய்கிறோம். அதுபோல் ஆதிகாலத்தில் மனிதன் வாழ்ந்த விதத்தையும் பதிவு செய்துள்ளனர். இம்மனித இனத்தில் தோன்றியவர்களான திருநங்கைகள் பண்டைக்காலம் முதல் வாழ்ந்ததற்கான பதிவுகளை இலக்கண, இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. அவை*

- ***தொல்காப்பியம்***
- ***நன்னூல்***
- ***சங்க இலக்கியம்***
- ***பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்***
- ***பக்தி இலக்கியம்***
- ***காப்பிய இலக்கியம்***
- ***தற்கால இலக்கியம்***

*போன்ற இலக்கண, இலக்கிய நூல்களில் திருநங்கைகள் தொடர்பான பதிவுகளை காண முடிகிறது.*

***1.தொல்காப்பியம்***

*தமிழுலகில் முதல் இலக்கண நூலாகக் கிடைக்கப்பெற்ற தொல்காப்பியம் தமிழ் மொழியின் தனிச்சிறப்புகளை எடுத்தியம்பும் நூலாக திகழ்கின்றது. மேலும் தொல்காப்பியம் இயற்றிய தொல்காப்பியரை ''பல்லாயிரம் ஆண்டைத் தமிழர் வாழ்க்கையை வடித்து வரையறுத்த வள்ளல்''*

என்று அறிஞர்கள் போற்றுகின்றனர். இத்தகைய சிறப்பு வாய்ந்த தொல்காப்பியத்திலும் திருநங்கைகள் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

**"பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்**

**ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்**

**தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்**

**இவ்என அறியும் அந்தம் தமக்கு இலவே**

**உயர்திணை மருங்கின் பால் திரிந்திசைக்கும்"**[2]

இவற்றில் ஆண் – பெண் என்னும் உயர்திணைகள் திரிந்தாலே மூன்றாம் பாலினமான திருநங்கைகள் உருவாகி உள்ளனர் என்பதை அறிய முடிகிறது. மேலும்,

**"ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி**

**ஆண்மை அறிசொற்கு ஆகிடன் இன்றே"**[3]

தொல்காப்பியர் மூன்றாம் பாலினத்தவர்களில் ஆண் தன்மையிலிருந்து பெண்மையை பெரும்பான்மையாகப் பெற்றவர்களை பெண்ணாக கருதல் வேண்டும் என்று திருநங்கைக்குரிய உணர்வுகளை மதிப்பிட்டுள்ளார்.

***2.நன்னூலில் திருநங்கைகள்***

பவணந்தி முனிவரால் இயற்றப்பட்ட நன்னூல் கி.பி.13ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். இவற்றில் நன்னூல் என்பது "நல்ல இலக்கணம்" என்று பொருள்படும்.

**"பெண்மைவிட்டு ஆண்அவா வுவபேடு ஆண்பால்**

**ஆண்மைவிட்டு அல்லது அவாவுவபேடு பெண்பால்**

**இருமையும் அஃறிணை அன்னவும் ஆகும்"**[4]

திருநங்கையை பேடு என்னும் சொல்லால் நன்னூல் குறிக்கிறது. "பெண்தன்மையினை விட்டு ஆண்தன்மையினை அவாவுவவனவாகிய பேடுகள் உயர்திணை ஆண்பாலாம், ஆண்தன்மையினை விட்டு பெண்தன்மையினை அவாவுவவனவாகிய படுகள் உயர்திணை பெண்பாலாம், இவ்விருவகைப் பேடுகளும் உயர்திணையாமன்றி அஃறிணைக்கு ஒப்பனவுமாம்" என்று நன்னூலார் குறிப்பிடுகின்றார்.

### *3.சங்க இலக்கியத்தில் திருநங்கைகள்*

*சங்க இலக்கியமானது இயற்கையோடு இயைந்த மனிதன் வாழ்வை எடுத்துரைக்கிறது. அத்துடன் பிறப்பினால் சற்று திரிபு அடைந்தவர்களான திருநங்கைகளை பற்றிய குறிப்புகளும் இடமடபெற்றுள்ளது. சங்க இலக்கிய நூல்களில் எட்டுத்தொகையில் நூல்களான அகநானூறு, புறநானூற்றில் மட்டும் திருநங்கைகள் பற்றிய குறிப்பு உள்ளது.*

### *3.1.புறநானூறு*

*எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான பண்டைய தமிழ்மக்களின் வீரத்தை பறைசாற்றுவனவாக உள்ளது. அவற்றில் சோழன் நலங்கிள்ளியைப் புகழ்ந்து பாடும் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் திருநங்கைகளை உடல்ஊனமுற்றவராகக் குறிப்பிடுகின்றார்.*

***"சிறப்புஇல் சிதடும் உறுப்புஇல் பிண்டமும்***

***கூனும் குறளும் ஊனமும் செவிடும்***

***மாவும் மருளும் உளப்பட வாழ்நர்க்கு***

***எண்பேர் எச்சம் என்று எவைஎல்லாம்***

***பேதைமை அல்லது ஊதியம் இல்"[5]***

*இப்பாடலில் "மக்களில் குறையுடையவர்களை எட்டாக வகைப்படுத்தியுள்ளார். அவை குருடு, வடிவற்ற தசைத்திறன், கூன், குறள், ஊமை, செவிடு, மா, மருள் ஆகியவையாகும். இவற்றில் வடிவற்ற தசைத்திறன் என்பது திருநங்கைகளை குறிப்பதாக அமைந்துள்ளது என்று உரையாசிரியர்கள் கூறுகின்றனர்.*

### *3.2அகநானூறு*

*எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான அகநானூற்றில் திருநங்கைகளை குறிக்கும் பேடி என்னும் சொல்லானது இடம்பெற்றுள்ளது. அவற்றில்மதுரை மருதன் இளநாகனார் திருநங்கைகளை பேடி என்னும் சொல்லால் குறிப்பிடுகிறார்.*

**"என்னனப் படும்கொல் – தோழிஃ நல்மகிழப்**

**பேடி பெண்கொண்டு ஆடுகை கடுப்ப..."[6]**

பரத்தையிடம் சென்ற தலைவன் தலைவியின் உடல் தணிக்கும் பொருட்டு விறலியைத் தூது அனுப்புகிறான். அவளுக்கு வாயில் மறுத்து உரைக்கும் போது ‘‘பேடி‘‘ என்னும் சொல் இடம்பெற்றுள்ளது.

***4.பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் திருநங்கைகள்***

*சங்ககாலத்தைத் தொடர்ந்து சங்க மருவிய காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களாகும். இவை மனிதனை அறச்செயல்களில் ஈடுபடும்படி வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. இவ்வற நூல்களுள் நாலடியார், திருக்குறள், ஔவையார் தனிப்பாடல்களில் திருநங்கைகளைக் குறிக்கும் சொல்லாடல் இடம்பெற்றுள்ளது.*

***4.1நாலடியார்***

*சமணமுனிவர்களால் இயற்றப்பட்ட நாலடியாரில் ‘‘ஒருவன் தன் மனைவியை விடுத்து பிறர் மனைவியை நாடியவனே அலியாவான்‘‘ என்று அலி என்பதற்கு விளக்கம் தரப்பட்டுள்ளது.*

**‘‘செம்மை யொன்றிச் சிறியார் இனத்தாராய்க்**

**கொம்மை வரிமுலையாள் தோள்மரீஇ உம்மை**

**பலியால் பிறர்மனைமேல் சென்றாரே இம்மை**

***அலியாகி ஆடி யுண்டார்‘‘[7]***

*என்று பிறன்மனைவியரை நாடியவர்க்குத் தண்டனையாக ‘‘அலிப்பிறப்பு‘‘ அமைந்துள்ளது என்று கூறி பிறன்மனை நயத்தல் கூடாது என்று நாலடியார் நல்லறம் போதிக்கிறது.*

***4.2திருக்குறள்***

*திருவள்ளுவர் பொருட்பாலில் உள்ள ஆள்வினை உடைமை, அவை அஞ்சாமை எனும் இரு அதிகாலத்திலும் ‘‘பேடி‘‘ என்னும் சொல்லை கையாண்டுள்ளார்.*

**”தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை**

**வாளாண்மை போலக் கெடும்‘‘[8]**

*இக்குறட்பாவில், முயற்சியில்லாதவன் செயலானது பேடியின் செயலாக கருதப்படும் என்று வள்ளுவர் எடுத்துரைக்கிறார். மேலும்,*

**‘‘பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்**

**தஞ்சு மவள்கற்ற நூல்“[9]**

இக்குறட்பாவில் அவையில் பேச அஞ்சி நடுங்கும் கோழையின் செயலானது, போர்க்களத்தில் வாளுடன் அஞ்சி நிற்கும் பேடியின் செயலுக்கு நிகரென வள்ளுவர் கூறுகிறார்.

***4.3 ஔவையார் தனிப்பாடல்கள்***

சங்கம் மருவிய காலத்தில் வாழ்ந்த ஔவையார் தன்னுடைய தனிப்பாடல் திரட்டில் திருநங்கைகளைக் குறிக்கும் பேடு என்னும் சொல்லானது இடம்பெற்றுள்ளது.

**“அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது**

**அதனினும் அரிது கூன் குருடு செவிடு பேடு**

**நீங்கப் பிறத்தல் அரிது“[10]**

மனிதப்பிறப்பின் மகத்துவத்தை எடுத்துரைக்கும் ஔவையார் கூன், குருடு, செவிடு போலவே பேடு என்படும் ஒருவகை குறைதான் என்கிறார்.

***5.பக்தி இலக்கியங்களில் திருநங்கைகள்***

பக்திஇலக்கிய காலத்தில் சைவ மற்றும் வைணவ சமயம் ஓங்கி வளர்ந்திருந்தது. இக்காலத்தில் பல பக்திஇலக்கியங்கள் தோன்றின. அவற்றில் திருவாசகம், திருமந்திரம் போன்ற இலக்கியங்களில் திருநங்கைகளைக் குறிக்கும் சொற்கள் இடம்பெற்றுள்ளன.

***5.1 திருவாசகம்***

சைவ சமய குரவர்களுள் ஒருவரான மாணிக்கவாசகர் சிவபெருமானை புகழ்ந்து பாடும் பாடலில் திருநங்கைகள் குறித்த பதிவு இடம்பெற்றுள்ளது.

**“ஆணோ அலியோ அரிவையோ என்றிருவர்**

**காணா கடவுள்“[11]**

இப்பாடலடியானது, திருப்பொன்னூசல் பகுதியில் உத்தரகோசமங்கையில் இருக்கும் சிவபெருமான் ஆண், பெண், அலி என்று அறியப்படாதவராக இருப்பதாக மாணிக்கவாசகர் குறிப்பிடுகின்றார்.

*5.2 திருமந்திரம்*

திருமூலர் இயற்றிய திருமந்திரத்தில் மூச்சுக்காற்றின் இயல்பிற்கேற்ப, பிறக்கும் குழந்தையின் பால் வேறுபாடு மாறும் என்பதை,

**"குழவியும் ஆணாய் வலத்து வாகில்**

**குழவியும் இரண்டாம் அபாகக் எதிர்க்கில்**

**குழவி அலியாகும் கொண்டக்கால் ஒக்கியே"[12]**

என்ற பாடலடிகளில் விளக்கியுள்ளார். அதாவது சுவாச உயிர்ப்பு இருவரும் மருவுங்காலத்து வலது மூக்கின் வழி வந்து கொண்டிருந்தால் பிறக்கும் மகவு ஆண் என்றும், இடது மூக்கின் வழி வந்து கொண்டிருந்தால் பெண் என்றும், இரண்டு மூக்கின் வழி வந்து கொண்டிருந்தால் அலி என்றும் கூறுகிறது.

*6. காப்பிய இலக்கியங்களில் திருநங்கைகள்*

காப்பிய இலக்கிய காலமானது சோழ வேந்தர்களின் காலமாக கருதப்படுகிறது. இவர்களின் காலத்தில் தனிநிலைச் செய்யுள் அல்லாமல் நீண்ட தொடர்நிலை செய்யுளாக கதை பொதிந்து இயற்றப்படுவது காப்பியமாகும். அவற்றில் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி போன்ற காப்பிங்களில் திருநங்கைகள் பற்றிய பதிவுகள் இடம்பெற்றுள்ளன.

*6.1 சிலப்பதிகாரம்*

இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்தில் கடலாடுகாதையிலும், நடுகாண்காதையிலும் திருநங்கைகளை குறிக்கும் பேடி என்னும் சொல்லானது இடம்பெற்றுள்ளது.

**"ஆண்மை திரிந்த பெண்மை கோலத்து**

**காமன் ஆடிய பேடி யாடலும்"[13]**

"ஆண்தன்மையை இழந்து பெண்தன்மை பெற்றக் கோலத்துடன் மன்மதன் ஆடிய ஆடல் பேடியாடல் "என்று கடலாடுகாதையில் இளங்கோவகள் குறப்பிடுகின்றார். மேலும், செங்குட்டுவனின் மனைவி வேண்மாள் நிலாமுற்றம் வரும் போது சுண்ணப்பொடிகளையும், வாச மலர்மாலைகளையும் ஏந்தி நிற்பதாக கூறப்பட்டுள்ளது.

**"வெண்அணிப் பேடியர் ஏந்தினர் ஒருசார்"[14]**

இப்பாடலடியின் மூலம் திருநங்கைகள் பேடி என்றும் பெயர் கொண்டு அழைக்கப்பட்டிருப்பதை அறியமுடிகின்றது.

### *6.2 மணிமேகலை*

*சீத்தலை சாத்தனார் இயற்றிய மணிமேகலையில் "மணிமேகலை கோவலன், கண்ணகிக்கு ஏற்பட்ட துயர் கேட்டுக் கண்ணீர் வடிக்கும் போது, மாதவி அவளுக்கு ஆறுதல் சொல்கிறாள். அப்போது மணிமேகலையின் அழகைக் கண்டால் ஆடவர்கள் அவளைவிட்டு நீங்கிச் செல்வோரானால் அவர்கள் பேடியர் "என்று கூறுவதாக உள்ளது.*

**"ஆடவர் கண்டால் அகறலு முண்டோ**

**பேடிய றன்றோ பெற்றியின் நின்றிடின்"[15]**

*மணிமகலையில் திருநங்கைகளை குறிக்கும் "பேடி" என்னும் சொல்லானது இடம்பெற்றள்ளது.*

### *6.3 சீவகசிந்தாமணி*

*திருத்தக்கத்தேவரால் இயற்றப்பெற்ற சீவகசிந்தாமணியில் காந்தருவதத்தை இலம்பகத்தில் திருநங்கை குறித்த பதிவுகள் இடம்பெற்றுள்ளது.*

**"தளையவிழ் கோதையாடித் தானமர்ந்திருப்பதைத் தோழி**

**விளைமதுக் கண்ணிவீணா பதியெனும்பேடி வேற்கண்**

**இளையவள் பாடவீர ரெழால்வகை தொடங்க லன்றேல்**

**வளையவ ளெழாலின் மைந்தர் பாடுக வல்லையென்றாள்"[16]**

*என்ற இப்பாடலின் மூலம், காந்தருவதத்தையின் தோழி வீணாபதி என்பவள் ஒரு திருநங்கை ஆவாள். அவளின் அழகையும், பிற மன்னர்கள் அவள் குறித்துச் சுட்டும் மொழிகளையும் ஆசிரியர் மிக அழகாக கூறியுள்ளார்.*

### *7. தற்கால இலக்கியங்களில் திருநங்கைகள்*

*தற்கால இலக்கியங்கள் சமூகத்தை நோக்கி எறியும் ஆயுதமாகும். இவ்விலக்கியங்களில் திருநங்கைகள் தொடர்பான பதிவுகள் மட்டுமில்லாமல் திருநங்கைகளால் இயற்றப்பட்ட இலக்கியங்களும் உள்ளடங்கும். அரவான், மூன்றாம் பாலின் முகம், வாடாமல்லி, வெள்ளை மொழி, சுயம்பு போன்ற பல இலக்கியங்கள் திருநங்கைகளின் வாழ்வினை பிரதிபலிக்கின்றன.*

### *7.1 விநாயகர் நான்மணிமாலை*

*விநாயகர் நான்மணிமாலையை இயற்றிய பாரதியார் தெய்வநிலைக்கு ஏற்றி அலிகளைப் போற்றுகிறார்.*

**“ஆணாய் பெண்ணாய் அலியாய் உள்ள**

**தியாதுமாய் விளங்கு இயற்கை தெய்வமே“**[17]

*என்ற பாடலடிகளானது, ஆணாய், பெண்ணாய், அலியாய் உள்ள இயற்கைத் தெய்வத்திடம் வரங்களை கேட்பதாக உள்ளது. இவற்றில் அலி என்பது திருநங்கைகளை குறிக்கும் சொல்லாகும்.*

### *7.2 சுயம்பு*

*வெ.முனிஷ் என்பவரால் இயற்றப்பெற்ற ‘‘சுயம்பு‘‘ எனும் கவிதை நூலானது திருநங்கைகளின் வாழ்க்கை, பிறப்பு, சடங்கு முறைகள் போன்றவற்றை பதிவு செய்துள்ளது. அக்கவிதை தொகுப்பில் திருநங்கை இனம் ஆதி இனம் என்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இதனை,*

**“கல் தோன்றி**

**மண் தோன்றாத**

**காலத்தில் முன்தோன்றிய**

**ஆதியினம்**

**அலியினம்“**[18]

*இக்கவிதையடிகள் மூலம் அறியலாம். திருநங்கைகள் ஆதியினமாக இருந்தாலும் இன்று அடிப்படை உரிமைக்காக போராடும் இனமாக வாழ்ந்து வருகின்றனர்.*

### முடிவுரை

*திருநங்கைகள் ஆதியினமாக இருந்ததை இலக்கண, இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றது. பல்வேறு காலகட்டங்களில் திருநங்கைகள் வாழ்ந்த விதம், அவர்களுக்கு கொடுக்கப்பட்ட முன்னுரிமை போன்றவற்றையெல்லாம் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளது. உரிமைக்காக போராடும் இனம் இன்று சமூகத்தை முன்னிறுத்தும் இனமாக மாறி வருவதையும் உணரமுடிகின்றது.*

சான்றெண் விளக்கம்


1.ஆயிஷா பாரூக் கட்டுரை, வலைப்பூ
2. முனைவர் ச.திருஞானசம்பந்தம், தொல் – சொல் (ப-14)
3.மேலது (ப-18)
4. முனைவர் ச.திருஞானசம்பந்தம், நன் – சொல் (ப-11)
5. புறம் – 28
6. அகம் – 206
7. நாலடியார் (254-4)
8. குறள் – 614
9. குறள் – 727
10. திண்ணை கட்டுரை
11. திருவாசகம் – 5
12. திருமந்திரம் (திண்ணை கட்டுரை)
13. சிலம்பு – கடலாடுகாதை (56-57)
14. சிலம்பு – நடுகாண்காதை ( 59-60)
15. மேகலை – மலர்வனம்புக்க காதை (24-25)
16. சிந்தாமணி – 651
17. விநாயகர் நான்மணிமாலை (29-30)
18. சுயம்பு (ப-94)